# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS 548/2019** Plaintiff : PW1

Deposition of Witness of Defendant:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. நாச்சியப்பன் | District | : | |
| Father/ Husband name | : | திரு. சண்முகம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 17.02.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் வாதி, வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 10.08.2015ம் தேதியிட்ட வாதிக்கு, பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1

2. வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2

3. 13.06.2019ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3

4. 03.07.2019ம் தேதியிட்ட 10.08.2018ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட மேற்குறிப்பு அசல் வா.சா.ஆ.4 (மேற்படி மேற்குறிப்பானது பிரதிவாதியால் எழுதி தரவில்லை என்பதால் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது)

5. 29.08.2019ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.5

6. 17.10.2019ம் தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.6

7. 24.02.2017ம்தேதியிட்ட தாவா சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.7

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணைக்கு கால அவகாசம் வழங்கி ஒத்திவைக்கப்படுகிறது.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.02.17 18:11:42 +0530